# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www.tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 78/2015**

திரு. எஸ். அந்தோணி ஜெயபால்,
13/1, கிருஷ்ண ராஜபுரம்,
4வது தெரு,
தூத்துக்குடி – 628 002. ––– மேல்முறையீட்டாளர்
(திரு. C. செல்வராஜ் )

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
தூத்துக்குடி மின் பகிர்மானவட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
131 & 132 எட்டயபுரம் ரோடு,
தூத்துக்குடி – 628 001. ––– எதிர்மனுதாரர்
(திரு. விஜய சங்கரபாண்டியன்,
உதவி செயற்பொறியாளர்/நகரம்/ வடக்கு/தூத்துக்குடி)

**கேட்புரை நாள் : 22–12–2015**

**ஆணை நாள் : 3–02–2016**

திரு. எஸ். அந்தோணி ஜெயபால், தூத்துக்குடி அவர்களின் நாளிடப்படாத மனு மேல்முறையீட்டு மனு எண் 78/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை 22.12.2015 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், இருதரப்பினராலும் கேட்புரையின் பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள், சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>ஆணை</u>

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :</u>**

தூத்துக்குடி பயனீட்டாளர், குறைதீர்வு மன்றத்தில் அவரால் வைக்கப்பட்டுள்ள அனைத்து கோரிக்கைகளையும் மின்சார குறைதீர்வு மன்றம் கணக்கில் எடுத்துக் கொண்டு நடைபெற்றுள்ள ஒழுங்கீனமான அனைத்துச் சேவை குறைபாடுகளுக்கும் உரிய நடவடிக்கை எடுத்து நீதியை நிலைநாட்டுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். எனவே, கீழ்கண்டவைகளை அவரின் கோரிக்கையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

(i) புதிய மின்னிணைப்பு வேண்டி மின்சார அலுவலகத்தில் செப்டம்பர் 2014–ல் விண்ணப்பம் செய்துள்ளார். அதை பெற்றுக்கொண்ட அலுவலர்கள் அதற்கான ஒப்புகையோ அல்லது உரிய தகவலோ எதுவும் கொடுக்கவில்லை. மேற்கண்ட சேவை குறைபாட்டிற்கு இழப்பீடு வழங்க வேண்டும்.

(ii) நிர்ணயிக்கப்பட்ட நாட்களையும் கடந்து பணி முடித்தமைக்கு இழப்பீடு வேண்டும்

(iii) விதிகளுக்கு முரண்பாடாக வாரிய ஊழியர் செயல்பட்டமையால் அது தொடர்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(iv) விதிக்கப்பட்ட மின்கட்டணம் ரூ.78/– தவறு என்று புகார் 6.3.2015–ல் சமர்ப்பித்தும் அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மின்கட்டணம் வசூல் செய்தமையால் மின்கட்டணத்தொகையை வட்டியுடன் இழப்பீட்டு தொகையும் சேர்த்து வழங்க வேண்டும்.

(v) ஏப்ரல் 2015 மற்றும் 2015 ஆகிய இரண்டு கணக்கீடு காலத்திற்கும் மின்சாரம் பயன்படுத்தப்படவில்லை (Not in use) என்று பதிவு செய்யப்பட்டுள்ளதால் அந்த மின்கட்டணத்தை திருப்பித்தர வேண்டும் என்றும் அவ்வாறு சேவைக்குறைவு ஏற்படுத்திய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(vi) 18.2.2015 அன்று தன்னிடம் பெறப்பட்ட ரூ.6500/–ல் புதிய மின்இணைப்பு கட்டணமான ரூ.1550/– போக மீதமுள்ள தொகையை வட்டியுடன் திரும்ப தர வேண்டுகிறார்.

**2. வழக்கின் சுருக்கம் :**

2.1 மேல்முறையீட்டாளரின் புதிய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் 21.10.2014 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மின்இணைப்பு எண்.6.3.2015 அன்று வழங்கப்பட்டுள்ளது.

2.2 மின்இணைப்பு எண்.347–037–957 16.12.2014–ல் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு ரூ.78/– 7.3.2015 வசூல் செய்யப்பட்டுள்ளது.

2.3 மேற்கூறிய மின்இணைப்பு வழங்குவதில் ஏற்பட்ட சேவை குறைபாட்டிற்கு நிவாரணம் கோரி தூத்துக்குடி மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மேல்முறையீட்டாளர் 29.6.2015ல் மனு செய்துள்ளார்.

2.4 மன்றம், தன்னுடைய தீர்வை 31.8.2015 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. மேற்கண்ட தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடம் இந்த மேல்முறையீட்டை 30.9.2015ல் சமர்ப்பித்துள்ளார்.

**3. மன்றத்தின் ஆணை:**

3.1 தூத்துக்குடி மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய 31.8.2015 நாளிட்ட ஆணையில் கீழ்கண்ட தீர்வை தெரிவித்துள்ளது.

*“மன்றத்தின் முடிவு :*

*மனுதாரர் தரப்பு மற்றும் வாரிய தரப்பு விவாதங்களை ஆய்வு செய்ததில் 21.10.2014 அன்று மனுதாரின் விண்ணப்பம் பதிவு செய்ததை மனுதாரரின் பிரதிநிதி ஏற்றுக்கொண்டு, ஆனால் தற்போது அன்றைய தேதியில் செப்டம்பர் 2014 மாதத்தில் புதிய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் அளித்தாகவும் பலமுறை அலுவலகத்திற்கு அலைந்ததாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் இதுவரை எந்த மின்வாரிய அலுவலகத்திலும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. ஏனெனில் 21.10.2014 அன்றுதான் மனு செய்து பதிவு கட்டணம் செலுத்தியுள்ளார்.*
*மேலும் மனுதாரின் புதிய மின்இணைப்பு வழங்க 22.02.2015 அன்று மின்கம்பம் நடும் பணியை மேற்கொண்டுள்ளதை வாரிய தரப்பில் அலுவலர்கள் எந்த நிலையிலும் மறுக்கவில்லை. மாறாக காலதாமதத்திற்கான காரணத்தை மன்றத்தின் முன் எடுத்துரைத்துள்ளார். அதாவது தமிழக அரசின் சிறப்பு திட்டமான தாய் தெரு விளக்கு விஸ்தரிப்பு பணிகள் நான்கு ஊராட்சிகளில் 43 மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளது. மேலும் பாதுகாப்பு கருதி 37 எண்ணங்கள் பழுதடைந்த மின்கம்பங்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் விஸ்தரிப்பு பணிகள் தொடர்பாக 15 மின்கம்பங்கள் நிறுவி சுமார் 750 மீட்டர் மின்கடத்திகள் மேற்படி பிரிவில் இழுக்கப்பட்டுள்ளது என செய்த பணிகளின் விபரம் வாரிய தரப்பில் தெரிவிக்கப்பட்டது.*

*மேற்படி மனுதாரருக்கு மின்கம்பம் நிறுவ ஏற்பட்ட காலதாமதத்திற்கு மேற்படி சரத்துக்களை சீராய்வு செய்யும்போது வேண்டுமென்றே நடைபெற்ற நிகழ்வு அல்ல என தெளிவாகிறது. இருந்தபோதிலும் வாரிய தரப்பில் ஏற்பட்ட காலதாமதத்திற்கும் முரண்பாடுகளுக்கும் உதவி பொறியாளர் ஊரகம் வடக்கு தூத்துக்குடி அவர்கள் மீது விசாரணை மேற்கொண்டு துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மனுதாரர் கொடுத்த புகாரின் பேரில் ஊரகம் வடக்கு தூத்துக்குடி மின்விநியோக பிரிவில் முன்னாள் வணிக ஆய்வாளர் திரு.ஏ.வி.எம்.ராஜன், அவர்கள் 18.02.2015 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையினரால் கையூட்டு நேரடியாக பெற்றுக்கொண்டதற்காக கைது செய்யப்பட்டு, குற்ற நடவடிக்கை தொடரப்பட்டு, Cr.No.02/2015-ன்படி வழக்கு தலைமை குற்றவியல் நீதிதுறை நடுவர் நீதிமன்றம் தூத்துக்குடியில் நிலுவையில் இருந்த வருகிறது.*

*மேலும் மனுதாரர் மன்றத்தில் சமர்பித்த CD-யில் பதிவு செய்யப்பட்ட உரையாடல்கள் யாவும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழவினரால் 18.02.2015 அன்று எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு முன்பு பதிவு செய்யப்பட்டவை ஆகும். ஆகவே CDல் உள்ள உரையாடல் மற்றும் ஏனைய அனைத்திற்கும் வழக்கு முடிவுற்ற பின்புதான் பரிகாரங்கள் கிடைக்க வாயப்புள்ளதா என பரிசிலிக்க ஏதுவாகும்.*

*மேற்படி குற்றவியல் நடவடிக்கை வழக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழவினரால் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வழக்கு எண்:CR2/2015 நிலுவையில் இருந்து வருவதால் நீதிமன்றத்தின் முடிவின் அடிப்படையிலேயே மனுதாரரின் கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்க இயலும் என இம்மன்றத்தில் தீர்மானித்து இம்மனுவை முடித்து வைக்கிறது"*

## 4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :</u>

4.1 மேல்முறையீட்டாளர் குறைதீர்மன்றத்திற்கு சமர்ப்பித்துள்ள மனுவில் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்.

(i) புதிய மின் இணைப்பு வேண்டி மின்வாரிய அலுவலகத்தில் செப்டம்பர் 2014–ல் விண்ணப்பம் செய்தார். அதைப் பெற்றுக்கொண்ட அலுவலர்கள் அதற்கான ஒப்புகையோ அல்லது உரிய தகவலோ எதுவுமே கொடுக்கவில்லை

(ii) பலமுறை மின்வாரிய அலுவலகத்திற்கு இது தொடர்பாக அலைந்த பின்பு 17.2.2015 அன்று அவரது வீட்டிற்கு மின்சாரம் வழங்க அலுவலக அனுமதி கிடைத்துள்ளதாக ரூபாய் 6500/– கேட்டனர். 23.2.2015 அன்று கம்பம் நடும் வேலையை செய்தார்கள்.

(iii) 6.3.2015 அன்று தான் அவர் வீட்டிற்கு யாரோ ஒருவர் மட்டும் வந்து மின் இணைப்பை கொடுத்துவிட்டு 16.12.2014–ல் மின் இணைப்பு கொடுக்கப்பட்டதாக வெள்ளை அட்டையில் குறித்து கொடுத்துவிட்டு மின்கட்டணமாக ரூ.78 கட்டும்படியாகப் பணித்தார்

(iv) அன்றைய தினமே 6.3.2015 அவர் மேற்பார்வை பொறியாளரைப் பார்த்து முந்தைய பாராவில் குறிப்பிட்ட செயலை புகாராகக் கொடுத்துள்ளார். புகாரைப் பெற்றுக்கொண்ட அலுவலர் இன்று வரை ஒப்புகையோ தகவலோ எந்த வித நடவடிக்கையோ எடுக்கவில்லை.

(v) 23.2.2015–ல் தான் மின்கம்பம் நடுதல், கம்பி இழுத்தல் போன்ற வேலைகள் நடந்தது என மின் அலுவலக ஆவணக்குறிப்புகள் உள்ள போது 4.2.2015 அன்று மதிப்பீடு செய்ததாகவும் கட்டணம் ரூ.17 என்றும் ஆனால் கட்டவேண்டிய தொகை ரூ.78 எனவும் வாரிய(account summary)கணினியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(vi) ஏப்ரல் 2015 மற்றும் ஜுன் 2015 ஆகிய இரண்டு கால மதிப்பீட்டின் குறிப்பு பகுதியில் (not in use) மின்சாரம் பயன்படுத்தவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் மின்கட்டணத் தொகை ரூ.29 மற்றும் ரூ.90 என வசூல் செய்தது எப்படி என தெரியவில்லை.

(vii) 6.3.2015 அன்று மின்இணைப்பு கொடுக்கும்போது கொடுத்த வெள்ளை மின்அட்டையில் மின்இணைப்பு கொடுத்தவர் பெயரோ கையொப்பமோ இல்லை

(viii) 17.2.2015 அன்று புதிய மின்இணைப்பிற்காக கட்ட ரூ.6500ஐ 18.2.2015 அன்று பெற்று கொண்டனர்.

(ix) மேலே கண்ட மின்இணைப்புக்கு செப்டம்பர் 2014–ல் விண்ணப்பம் செய்ய இன்று வரை ஏற்பட்டுள்ள குறைகளுக்கும் குழப்பங்களுக்கும் முறைகேட்டிற்கும் காரணமான உயர்மட்ட அலுலவலர் முதல் ஊழியர்கள் வரையுள்ள அத்தனை நபர்கள் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

4.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவில் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்.

(i) மின்இணைப்பு வழங்குவதற்கு காலதாமதமானது தொடர்பான தூத்துக்குடி பயனீட்டாளர் குறைதீர்வு மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கின் மீது மன்றத்தால்

வழங்கப்பட்டிற்கும் தீர்ப்பு பொருளற்றதாகவும் திட்டமிட்டு தவறு செய்தவர்களை பாதுகாக்கும் தெளிவான தன்மையை வெளிக்காட்டுவதாகவும் அமைந்துள்ளது.

(ii) மேலும் நடைபெற்ற குறைபாடுகளுக்கு வேலை பளுதான் காரணம் என்கின்ற வாரிய பிரிதிநிதியின் வாதத்தை மன்றம் அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளது. விதிமுறைகள் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டிருப்பதை மன்றம் கண்டுக் கொள்ள தயாராக இல்லை.

(iii) வேலைபளுவின் காரணமாக காலதாமதம் ஏற்பட்டது என்பதை ஒரு வாதத்திற்கு ஏற்றுக் கொண்டாலும் விண்ணப்பத்தின் மீது வாரியத்தால் எடுக்கப்பட்ட ஒழுங்கீனமான செயல்களுக்கும் வேலைபளுவிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

(iv) அத்துடன் விஸ்தரிப்பு பணிகள் செய்யப்படாத நிலையில் 16.12.2014 அன்று மின் இணைப்பு கொடுக்கப்பட்டதாக கணினியில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஒழுங்கீனமான செயலையும் மன்றம் கண்டுகொள்ளவில்லை.

(v) எல்லாவற்றிற்கும் மேலாக 6.3.2015 ல்தான் மின்இணைப்பு கொடுக்கப்பட்டதாக வாரியப் பிரதிநிதியால் ஒத்துக்கொள்ளப்பட்ட நிலையில் 4.2.2015 அன்று இல்லாத மின்இணைப்பிற்கு கணக்கீடு செய்து முறைகேடாக ரூ.78ஐ அவரிடம் வற்புறுத்தி வசூல் செய்யப்பட்டிருப்பதும் மன்றத்தின் கண்களுக்கு தெரியவில்லை. ரூ.6500/– எவ்வித நியாயமோ விதிப்படியோ இல்லாமல் கட்டாயப்படுத்தி வசூல் செய்யப்பட்டிருப்பதும் மன்றத்தின் பார்வைக்கு தெரியவில்லை.

(vi) ஆனால், அவரால் கொடுக்கப்பட்ட வழக்கிற்கு தொடர்பு இல்லாத ஊழல் தடுப்பு கண்காணிப்பு குழுவினரின் வழக்கினை இதற்கு தொடர்புபடுத்தி பொறுத்தமில்லாத ஒரு தீர்ப்பினை மன்றம் வழங்கியிருப்பது மன்றத்தின் நேர்மையற்ற தன்மையை வெளிக்காட்டுகிறது.

(vii) மேற்கண்டவை தவிர வரையறுக்கப்பட்ட காலவரம்பிற்குள் புகார்மீது தீர்வு வழங்காமல் காலம் கடந்துதான் குறைதீர்வு மன்றம் செயல்பட்டுள்ளது.

(viii) எனவே, வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் மன்றம் செயல்படாமல் இருந்ததாலும் புகாருக்கு தொடர்பில்லாத ஊழல் தடுப்பு துறையின் வழக்கினை தொடர்புபடுத்தி புகாரை முடித்து வைத்திருப்பதாலும் மன்றத்தால் வழங்கப்பட்டுட்ளள ஆணை செல்லாததாகி விடுகிறது.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>

5.1 மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த மேல்முறையீட்டைப் பார்த்தாலே அவர் தனது வீட்டிற்கு மின் இணைப்பு காலதாமதமாக கிடைத்ததற்கும் அவரிடம் பணம் ரூ.6500/— வாரிய ஊழியர்கள் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதற்கும் மின்கட்டணமாக ரூ.90, 29க்கு வாங்கினதற்காக கொடுக்கப்பட்ட புகாரே அல்ல என்பது தெள்ளத்தெளிவாக தெரியவரும். ஏனென்றால் மேல்முறையீட்டாளர் தான் செப்டம்பர் 2014ல் முதல் விண்ணப்பம் செய்ததாக குறிப்பிட்டுள்ளார்கள். தேதி கூறவில்லை. இதிலிருந்து மேல்முறையீட்டாளர் செப்டம்பர் 2014ல் விண்ணப்பம் கொடுக்கவில்லை என்பது நன்கு துலங்கும். மேலும், விண்ணப்பக்கட்டணம் 21.10.2014 அன்று தான் மேல்முறையீட்டாளர் செலுத்தியுள்ளார். இதிலிருந்து மேல்முறையீட்டாளர் 21.10.2014 அன்று தான் விண்ணப்பம் செய்தார் என்பது தெரியவரும்.

5.2 மேலும், ரூ.6500/— மேல்முறையீட்டாளர் AVM ராஜனிடம் கட்டணம் கட்ட கொடுத்ததாக கூறியுள்ளார். ஆனால் அவர் ஏற்கனவே 28.11.2014 தேதியன்று உரிய கட்டணமான ரூ.1550/— செலுத்தி ரசீதும் பெற்றுள்ளார். இந்த சூழ்நிலையில் படித்த நபரான மேல்முறையீட்டாளர் இரண்டாவது முறையாக கட்டணம் என்ற தலைப்பில் ரூ.6500/— செலுத்தியிருக்க மாட்டார். இதிலிருந்தே மேல்முறையீட்டாளர் ரூ.6500/— வேறு எதற்கோ ஊழியர் AVM ராஜனிடம் கொடுப்பது சம்பந்தமாக பேசியுள்ளார். அது என்ன என்று மேல்முறையீட்டாளருக்குதான் தெரியும். ஏனென்றால் அவர் பேசினது AVM ராஜனிடம் மேற்படி ராஜன் DV&AC காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

5.3 மேலும், மேல்முறையீட்டாளருக்கே தெரியும் ரூ.6500/— மின்வாரியத்திடம் அவர் செலுத்தவில்லை என்பது. அவருடைய கூற்றுப்படியே அவரது ரூ.6500/—ஐ DV&AC காவல்துறையினரிடமே ஒப்படைத்துள்ளார். அதில் அவர்கள் ரசாயனம் தடவி மேல்முறையீட்டாளரை வைத்து AVM ராஜனிடம் கொடுத்து AVM ராஜன் trap செய்து மேற்படி பணத்தை மீண்டும் கைப்பற்றி நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளனர் என்பது நன்கு தெரியும் அவ்வாறு மேல்முறையீட்டாளர் 18.2.2015 அன்று அவர் AVM ராஜனிடம் கொடுத்த 6500/— முழுமையாக மின் வாரியத்திற்கு போகவில்லை காவல் நிலையத்திற்கு சென்று விட்டது என்று நன்கு தெரிந்தும் மேற்படி தொகையை மின்வாரியம் தரவேண்டும் என்று மேல்முறையீட்டாளர் வைத்திருக்கும் கோரிக்கை ஏற்புடையதல்ல என்பது விளங்கும்.

5.4 மேல்முறையீட்டாளருக்கு புதிய மின் இணைப்பு வழங்க 22.2.2015 அன்று மின்கம்பம் நடும் பணி மேற்கொள்ளப்பட்டதை வாரியம் தரப்பு அலுவலர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். 16.12.2014 அன்று மேல்முறையீட்டாளருக்கு மின்இணைப்பு வழங்கியதாக வாரியத்தில் கணக்கு காட்டிவிட்டு 6.3.2015ல் தான் மேல்முறையீட்டாளருக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டது. என்பதனை இளநிலை பொறியாளர் ஒப்புக்கொள்கிறார்.

5.5 மேல்முறையீட்டாளருக்கு உடனே மின்இணைப்பு வழங்க முடியாததற்கு காரணம் அவரது சரகத்தில் தாய்திட்டத்தில் தெரு விளக்கு விஸ்தப்பு பணிகள் 4 ஊராட்சிகளில் 43 மின் கம்பங்கள் நடப்பட்டது. மேலும், பழுதான மின்கம்பங்கள் 37 எண்ணம் மாற்றி அமைக்கப்பட்டது. மற்றும் ஒரு புதிதாக ஒரு மின்மாற்றி நிறுவப்பட்டது. மேலும், பிரிவில் விஸ்தரிப்பு பணிகள் 15 கம்பங்கள் நடப்பட்டது. 7/2.59 ACSR மின் கடத்திகள் 780 மீட்டர் இழுத்தது ஆகிய பணிகள் மேற்கொண்டதால் மேல்முறையீட்டாளருக்கான மின் இணைப்பினை வாரிய காலக்கெடுவிற்குள் கொடுக்க முடியவில்லை. அதனால் அவர் மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு உடனடியாக கொடுக்க நடவடிக்கை எடுத்ததை கருத்தில் கொண்டு வாரிய காலக்கெடுவிற்குள் மின்இணைப்பு கொடுக்கப்பட்டதாக அதாவது 16.12.2014 மின் இணைப்பு

கொடுக்கப்பட்டதாக கணக்கில் ஏற்றியுள்ளார். அதன் பிறகு 6.3.2015 மின் இணைப்பு வழங்கியுள்ளார்.

5.6 மேற்படி விபரம் தெரிந்த உடன் அவர் மீது துறைவாரியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இளநிலை பொறியாளரின் மேல் உள்ள அந்தக் குற்றச்சாட்டிற்கு துறைவாரியான நடவடிக்கையே ஒரே வழி. அது செயல்பட்டு வருகிறது.

5.7 மேல்முறையீட்டாளர் ரூ.78/– அவர் கூறியது போல் செலுத்தவே இல்லை என்பதனை மறைத்து வாரியத்தில் வற்புறுத்தி வசூல் செய்யப்பட்டது என்று பொய்யுரைத்துள்ளார்கள். அவ்வாறு அவர் செலுத்தியிருந்தால் அதற்குரிய ரசீது அவரிடம் இருந்திருக்கும். அவரிடம் அது இல்லாததிலிருந்தே அவர் அத்தொகையை செலுத்தவில்லை என்பது புலனாகும். எனவே, மேல்முறையீட்டாளர் மேற்படி தொகையை கேட்பது நியாயமற்றது ஆகும்.

5.8 மேல்முறையீட்டாளர் ரூ.6500/– லஞ்சமாக மின் இணைப்பு கொடுப்பதற்கு அவரிடம் வசூலிக்கப்பட்டது என்று குற்றம் சாட்டிவிட்டு மேற்படி ரூ.6500/– மின் இணைப்பிற்கு சம்பந்தம் இல்லாதது என்று அவருடைய மேல்முறையீடு பத்தி 6இல் கூறியிருப்பது அவர் முன்னுக்குப்பின் முரணாக கருத்தை கூறுகிறார் என்பது தெரியவரும்.

5.9 மேற்படி ரூ.6500/– DV&AC வழக்கு முடிந்த பிறகே அதனைப் பற்றி முடிவு செய்ய முடியும் என்று மன்றம் கூறியிருப்பது நிகழ்தகு நிலைக்கு சரியே. மேலும், அதை குற்றவியல் நீதிமன்றம் மட்டும் முடிவு செய்ய இயலும். இதுகாறும் மேலும், தெரிவிப்பது என்னவென்றால் வாரிய கணக்கில் வாரிய கவுண்டரிலோ அதற்குண்டான வாரிய அலுவலகத்தில் செலுத்தப்படும் தொகையாக இருந்து அதை மேல்முறையீட்டாளர் திருப்பி செலுத்த கோரி இருந்தாலாவது அதை ஏற்கலாம். ஆனால் அவ்வாறாக நிகழ்வு இல்லை.

5.10 குறைதீர்மன்றம் இருதரப்பினருக்கும் அவர்களது கட்சிகள் எடுத்துரைக்க உரிய கால அவகாசம் கொடுத்தே தீர்வு கண்டுள்ளது. இயற்கை நீதியை பின்பற்றி விசாரணை மேற்கொண்டு உத்தரவு பிறப்பித்துள்ளது. மேற்படி புகார் விசாரணையின்போது மேல்முறையீட்டாளர் மன்றம் அதிகமாக கால அவகாசம் எடுத்துக் கொள்கிறது என்று கூறவே

இல்லை. மேலும், அவர் எந்த ஒரு காலதாமதம் பற்றி குறை கூறாமல் அல்லது உடனடியாக இம்மன்றத்திற்கு வராமல் விசாரணையில் கலந்து கொண்டு விட்டு தற்போது மன்றத்தின் முடிவு மேல்முறையீட்டாளர் மற்றும் அவர் சார்பில் ஆஜரான திரு. அய்யாசாமி முன்னாள் செயற்பொறியாளர் அவர்கள் தீய நோக்கத்தோடு ஒத்து வரவில்லை என்பதால் கீழமை மன்றத்தின் நடவடிக்கையை பற்றி குறைகூறுவது முரண்தடை எனும் சட்டத்தத்துவப்படி ஏற்றுக் கொள்ளலாகாது.

## 6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 22.12.2015, அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 திரு. C. செல்வராஜ் பொது செயலாளர், FACT INDIA அவர்கள் மேல்முறையீட்டாளர் சார்பில் வாதங்களை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. விஜய சங்கரபாண்டியன், உதவி செயற்பொறியாளர்/நகரம்/ வடக்கு/தூத்துக்குடி அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

## 7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளின்பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளரிடமிருந்து மின்சார இணைப்பு கோரும் விண்ணப்பதை பெற்ற பின்பு விண்ணப்பத்தை பெற்றதற்கான ஒப்புதல் தரப்படவில்லை என்றும் அதன் பிறகு செலுத்த வேண்டிய கட்டணம் பற்றிய தகவலும் தரப்படவில்லை என்று வாதிட்டு எனவே, ஒழுங்குமுறை ஆணையத்தினால் ஏற்படுத்தப்பட்டு மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதிகளில் கூறியுள்ளபடி வாரியத்தின் அலுவலர்கள் செயல்படவில்லை என்று வாதிட்டார். மேலும், அவ்வாறு எவ்வித தகவலும் தரவில்லை என்பதால் இழப்பீட்டு தொகை வழங்கப்பட

வேண்டும் என்று மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான விதி 17–ஐ சுட்டிக்காட்டி வாதுரை புரிந்தார்.

7.3 மேல்முறையீட்டாளரிடமிருந்து விண்ணப்பத்தை பதிவு செய்வதற்கான கட்டணம் ரூ.50/– மின் இணைப்பு வழங்குவதற்கான கட்டணங்கள் ரூ.1550 ஆகிய இருகட்டணங்களும் தன்னிடம் வசூலிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

7.4 மின்இணைப்பு வழங்காமல் மின் இணைப்பு 20.12.2014ல் வழங்கியதாக பதிவு செய்து 2/2015 காலங்களுக்கான கட்டணம் மட்டும் RC FEES என்று ரூ.78ஐ 7.3.2015ல் வசூல் செய்தது நியாயமற்றது என்றும் அவ்வாறு பெறப்பட்ட கட்டணத்தை வட்டியுடன் திரும்ப தரவேண்டும் என்று வாதிட்டார்.

7.5 மேற்கண்ட தவறான மின்கட்டணம் கேட்பு பற்றி 6.3.2015ல் மேற்பார்வை பொறியாளர், தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம் அவர்களுக்கு மனு செய்தும் எந்தவிதமான பதிலும் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதால் மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதிகளின்படி உரிய இழப்பீட்டு தொகை வழங்கப்படவேண்டும் என்றும் வாதிட்டார்.

7.6 மேலும், மேல்முறையீட்டாளர் செப்டம்பர் மாதம் சமர்ப்பித்த விண்ணப்பத்திற்கு 6.3.2015 அன்றுதான் மின்இணைப்பை வழங்கியதால் ஒழுங்குமுறை ஆணையத்தின் விதிமுறைகளின்படி 60 நாளில் வழங்கப்படவேண்டிய மின்இணைப்பு தாமதமாக வழங்கப்பட்டமைக்கு உரிய இழப்பீட்டு தொகை வழங்கப்படவேண்டும் என்று கோரினார்.

7.7 4/2015 மற்றும் 6/2015 ஆகிய காலங்களில் மின்பயன்பாடு இல்லை என்று தெரிவித்துவிட்டு வசூல் செய்த மின்கட்டண தொகை ரூ.29, மற்றும் 90ஐயும் வட்டியுடன் திரும்பி தரவேண்டும் என்று வாதிட்டார்.

7.8 மேலும், அவரிடமிருந்து வசூல் செய்யப்பட்ட ரூ.6500/–ல் மின்இணைப்பு கட்டணமான ரூ.1550/– போக மீதமுள்ள தொகை ரூ.4950/–ஐ திருப்பி தரவேண்டும் என்றும் வாதிட்டார்.

7.9 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி மேற்கண்ட தொகை வாரியத்தின் அலுவலரான வணிக ஆய்வாளரிடம் தான் மேல்முறையீட்டாளரால் வழங்கப்பட்டது.எனவே, வாரியத்தின் அலுவலரிடம் கொடுக்கப்பட்ட தொகையில் வாரியத்திற்கு சேரவேண்டிய தொகையைத் தவிர மீதமுள்ள ரூ.4950/– மேல்முறையீட்டளாருக்கு வழங்கவேண்டும் என்றும் அது DV&AC வழக்கிற்காக நீதிமன்றத்தில் உள்ளது என்று கூறுவது ஏற்புடையது அல்ல என்று வாதுரை புரிந்தார்.

7.10 மேலும், மின்இணைப்பு தராமல் மின்இணைப்பை வழங்கியுள்ளதாக பதிவு செய்து மின்இணைப்பு வழங்கப்படாத காலமான 2/2014க்கான மின்கட்டணம் கட்டப்படவில்லை என்று மின்கட்டணம் BPSC மற்றும் RC charges வசூல் செய்துள்ளதற்கு காரணமான வாரிய அலுவலர்கள் அனைவர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் வாதிட்டார்.

## 8. <u>எதிர்மனுதாரர் கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரரின் சார்பில் திரு. C. விஜய சங்கரபாண்டியன், உதவி செயற்பொறியாளர், நகரம்/வடக்கு அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

8.2 உதவி செயற்பொறியாளர்/நகரம்/வடக்கு அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார். உதவி செயற்பொறியாளர் அவர்கள் மேல் முறையீட்டாளரின் விண்ணப்பம் 21.10.2014 அன்று ரூ.50 செலுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்து அதற்கு ஆதாரமாக 21.10.2014 நாளில் வழங்கப்பட்ட ரசீதின் நகலை சமர்ப்பித்துள்ளார். எனவே, ரசீது வழங்கப்பட்டுள்ளதால் தனியாக ஒப்புதல் தரப்படவில்லை என்றும் வாதிட்டார்.

8.3 மேற்கண்ட விண்ணப்பம் விஸ்தரிப்பு என்ற பிரிவில் வருவதால் மதிப்பீட்டிற்கு உதவி செயற்பொறியாளரின் அனுமதி 3.11.2014 அன்று வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

8.4 மேலும், 28.11.2014 அன்று விண்ணப்பதாரர் மின்இணைப்பு பெறுவதற்கான கட்டணமான ரூ.1550/—ஐ செலுத்தியுள்ளார் என்றும் மின்கம்பம் நடும் பணி 22.2.2015 அன்று மேற்கொள்ளப்பட்டு 6.3.2015ல் மின்இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது என்றும் தெரிவித்தார்.

8.5 அவரது சரகத்தில் தாய் திட்டத்தில் தெரு விளக்கு விஸ்தரிப்பு பணிகள் 4 ஊராட்சிகளில் 43 மின் கம்பங்கள் நடப்பட்டது என்றும் பழுதான மின் கம்பங்கள் 37 மாற்றி அமைக்கப்பட்டன என்றும் புதியதாக ஒரு மின்மாற்றி நிறுவப்பட்டது என்றும் 7/2.59 ACSR மின்கடத்திகள் 780 மீட்டர் நிறுவப்பட்டன என்றும் தெரிவித்து மேற்கண்ட காரணங்களினால் தான் மின்இணைப்பு வழங்க தாமதமாகிவிட்டது என்று வாதிட்டு வேலைபளு காரணமாக தாமதம் என்பதால் இழப்பீடு கொடுக்கவேண்டியது இல்லை என்றும் வாதிட்டார்.

8.6 மின்இணைப்பிற்கான கட்டணங்கள் 28.11.2014 அன்று செலுத்தப்பட்டு விட்டதால் மேல்முறையீட்டாளர் வேறு கட்டணம் எதுவும் செலுத்தவேண்டியது இல்லை. எனவே, அவர் திரு. AVM ராஜன் என்ற வாரிய அலுவலரிடம் ரூ.6500/— கொடுத்துள்ளேன் என்று தெரிவித்துள்ள தொகை வாரிய கணக்கில் சேரவில்லை . எனவே, வாரியத்தின் கணக்கில் சேராத் தொகையை வாரியம் திரும்ப அளிக்க வேண்டும் என்பது ஏற்புடையது அல்ல என்று தெரிவித்துள்ளார். மேலும், மேற்கண்ட தொகை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்ற தகவலையும் தெரிவித்தார்.

8.7 மேலும், சம்பந்தப்பட்ட உதவி பொறியாளர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அவருக்கு வழங்கப்படும் ஊதிய உயர்வு ஒரு வருட காலத்திற்கு பின் விளைவுகள் தொடராவண்ணம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது (one increment cut without cumulative effect) என்றும் தெரிவித்தார்.

8.8 மேற்பார்வை பொறியாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட 6.3.2015 நாளிட்ட மனுவிற்கு பதில் எதுவும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

## 9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர் மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் இருதரப்பினராலும் கேட்புரையின் பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கைகளுக்கு கோரிக்கை வாரியாக தீர்வுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## 10. <u>கோரிக்கை ஒன்றிற்கான தீர்வு</u>

10.1 மேல்முறையீட்டாளர் அவர் செப்டம்பர் 2014ல் சமர்ப்பித்த அவருடைய மின்சார இணைப்பு கோரும் விண்ணப்பத்திற்கு ஒப்புதல் (acnkowledgement) தரவில்லை என்றும் விண்ணப்பம் பெற்ற பின்பு எந்த ஒரு தகவலும் அளிக்க வில்லை என்றும் தெரிவித்து மேற்கண்ட சேவை குறைபாட்டிற்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்று கோரியுள்ளார்.

10.2 தமிழ்நாடு மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதிகளின்படி ஒரு மனு செய்தால் 10 நாட்களுக்குள் பதில் எதுவும் பெறாவிடில் இழப்பீடு வழங்கவேண்டும் என்று உள்ளது. இங்கு விண்ணப்பம் பெறப்பட்டு ஒப்புதல் வழங்கப்படவில்லை அதன் பிறகும் மதிப்பீடு தொகை செலுத்துவதற்கு எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை எனவே, இழப்பீடு தொகை வழங்கப்படவேண்டும் என்று மேல்முறையீட்டாளர் வாதுரை புரிந்தார்.

10.3 எதிர்மனுதாரர் விண்ணப்பம் எதுவும் செப்டம்பர் 2014ல் சமர்ப்பிக்கவில்லை . அவர் 21.10.2014 அன்றுதான் விண்ணபத்தை சமர்ப்பித்துள்ளார். 21.10.2014 அன்று விண்ணப்பம் ரூ.50/– செலுத்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்தமைக்கான ரசீதும் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து அந்த ரசீதின் நகலையும் சமர்ப்பித்துள்ளார். ரசீது வழங்கப்பட்டுள்ளதால், தனியாக ஒரு ஒப்புதல் வழங்க தேவையில்லை என்றும் வாதிட்டார். மேலும், 28.11.2014 அன்று மின்இணைப்பு கட்டணத்தையும் செலுத்தியுள்ளார். எனவே, அவருக்கு தகவல் எதுவும் தெரிவிக்கவில்லை என்பது தவறு என்று வாதிட்டார். எனவே,

இழப்பீடு எதுவும் தரவேண்டியது இல்லை என்றும் வாதிட்டார். மேலும், மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளில் மின்நுகர்வோர் மனுக்களுக்கு தகுந்த பதில் நடவடிக்கை இல்லையெனில் தான் ஈட்டுத்தொகை செலுத்தவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இழப்பீடு எதுவும் வழங்கவேண்டியது இல்லை என்றும் வாதிட்டார்.

**10.4** இதுசம்பந்தமாக நான் மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி **27(3)**இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பை ஆராய விரும்புகிறேன். அந்த குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*27.Requisitions for Supply of Energy:*
*xxx xxxx xxxx*
*xxxx xxx xxxx*
*Note : Requisitions for supply of energy ( Applications) , even if incomplete, and irrespective of whether they are handed over in person or by post, should be acknowledged in writing. If they are in order, they shall be registered immediately and acknowledged. If they are incomplete, the defects should be indicated and returned without registration.*

**10.5** மேற்கண்ட குறிப்பின்படி மின்சாரம் கோரும் விண்ணப்பம் சரியாக இருந்தால் அதை பதிவு செய்து அந்த விண்ணப்பத்தை பெற்றமைக்கான ஒப்புதலையும் தரவேண்டும் என்று தெரிகிறது. என் முன்னால் உள்ள வழக்கில் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டுள்ளது பதிவு கட்டணம் செலுத்தியமைக்கான ரசீதும் போடப்பட்டுள்ளது. ஆனால், தனியாக ஒப்புதல் எதுவும் வழங்கப்படவில்லை. ஒப்புதல் தராமல் இருந்தமை மேற்கண்ட விதியின்படி தவறு தான்.

**10.6** மேல்முறையீட்டாளர் ஒப்புதல் வழங்காமல் இருந்தமைக்கும் வேறு எந்த தகவலும் தராமல் இருந்தமைக்கும் இழப்பீடு வேண்டும் என்று தமிழ்நாடு மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமறைவிதி **17**–ஐ சுட்டிக்காட்டியுள்ளதால் அந்த விதி **17** கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“17. Responding to Consumer’s Complaint*

*If any consumer makes a complaint in writing to the Territorial Engineer of the concerned licensee then, the Territorial Engineer concerned shall reply to the consumer within ten days after receipt of the letter. In case the Territorial Engineer requires to visit the site or consult any other officer to give a comprehensive reply,*

*the Territorial Engineer shall explain to the consumer as to why a substantive response cannot be sent immediately and intimate the name address and telephone number of the Officer dealing with the complaint. The Territorial Engineer shall also ensure that a substantive response is sent to the consumer within twenty days of receiving the complaint letter."*

10.7 மேற்கண்ட விதியை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது மேற்கண்ட விதி நுகர்வோரால் சம்பந்தப்பட்ட பொறியாளருக்கு எழுத்துவடிவில் செய்யப்படும் முறையீடுகளை பற்றியது ஆகும். எனவே, மேற்கண்ட விதியின்படி ஒப்புதல் வழங்காமை மற்றும் விண்ணப்பத்தை பெற்ற பின்பு எந்த தகவலும் அனுப்பாமைக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்பது ஏற்புடையது அல்ல.

10.8 மேலும், மின்இணைப்பு கோரும் விண்ணப்பங்களை பொறுத்தவரையில் பதிவு செய்த பின்பு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் மின்இணைப்பு வழங்கப்படாவிடில் ஈட்டுத்தொகை வழங்குதற்கு விதிகளில் வழியுள்ளது. எனவே, மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான விண்ணப்பத்திற்கு ஒப்புதல் தராமைக்கும் வேறு எந்த தகவலும் அனுப்பாமைக்கும் இழப்பீடு தொகை வழங்க மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11. <u>கோரிக்கை இரண்டிற்கான தீர்வு</u>**

11.1 நிர்ணயிக்கப்பட்ட நாட்களையும் கடந்து பணி முடித்தமைக்கும் உரிய இழப்பீட்டு தொகை வேண்டும் என்று கோரியுள்ளார்.

11.2 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் செப்டம்பரில் சமர்ப்பித்து 21.10.2014 அன்று பதிவு செய்யப்பட்டு 6.3.2015 அன்றுதான் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒழுங்குமுறை ஆணையம் விதித்துள்ள விதிகளின்படி மின்மாற்றி அமைக்காமல் விஸ்தரிப்பு பணி செய்து ஒரு மின்இணைப்பை வழங்கவேண்டும் எனில் 60 நாட்களுக்குள் பணிமுடித்து மின்இணைப்பை வழங்கவேண்டும். ஆனால், இங்கு மின்

இணைப்பை வழங்க எடுத்துக் கொண்ட காலம் 60 நாட்களுக்குள் மேலாக உள்ளதால் உரிய இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

11.3 எதிர்மனுதாரர், மேற்கண்ட விண்ணப்பத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் மின்இணைப்பை வழங்காமைக்கான காரணம் அவரது சரகத்தில் கீழ்க்கண்ட வேலைகள் நடந்தமைதான் என்று தெரிவித்தார்.

(i) தாய்திட்டத்தில் தெருவிளக்கு விஸ்தரிப்பு பணிகள் 4 ஊராட்சிகளில் நடைபெற்றது. 43 மின் கம்பங்கள் நடப்பட்டது.

(ii) பழுதான 37 மின் கம்பங்கள் மாற்றி அமைக்கப்பட்டன.

(iii) புதிதாக ஒரு மின்மாற்றி அமைக்கப்பட்டது

(iv) விஸ்தரிப்பு பணிகளில் 15 கம்பங்கள் நடப்பட்டன மற்றும்

(v) 7/2.59 மின்கடத்திகள் 780 மீட்டர் இழுக்கப்பட்டன. மேற்கண்ட பணிகளின் காரணமாகத்தான் மின்இணைப்பினை காலக்கெடுவுக்குள் கொடுக்கமுடியவில்லை . எனவே, பணிச்சுமையின் காரணமாக என்பதால் இழப்பீடு கொடுக்க வேண்டியது இல்லை என்று வாதிட்டுள்ளார்.

11.4 இது சம்பந்தமாக நான் தமிழ்நாடு மின்சார செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி (4) மற்றும் 21 ஆகியவற்றை ஆராய விரும்புகிறேன். அந்த விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“4. Duties of the Licensees to Supply on Request :*
*Section 43 of the Act deals with duty to supply and read as below:*
*"43. (1) Every distribution licensee, shall, on an application by the owner or occupier of any premises, give supply of electricity to such premises, within one month after receipt of the application requiring such supply: Provided that where such supply requires extension of distribution mains, or commissioning of new sub-stations, the distribution licensee shall supply the electricity to such premises immediately after such extension or commissioning or within such period as may be specified by the Appropriate Commission. Provided further that in case of a village or hamlet or area wherein no provision for supply of electricity exists, the Appropriate Commission may extend the said period as it may consider necessary for electrification of such village or hamlet or area.*

*(2) It shall be the duty of every distribution licensee to provide, if required, electric plant or electric line for giving electric supply to the premises specified in sub-section (1): Provided that no person shall be entitled to demand, or to continue to receive, from a licensee a supply of electricity for any premises having a separate supply unless he has agreed with the licensee to pay to him such price as determined by the Appropriate Commission.*
*(3) If a distribution licensee fails to supply the electricity within the period specified in sub-section (1), he shall be liable to a penalty which may extend to one thousand rupees for each day of default." The Licensees shall endeavor to give supply within a week but not exceeding 30 days wherever no extension or improvement works are involved in giving supply. The Licensees shall observe the following time schedule for supply of electricity involving extension of distribution lines, etc.*

| *Category* | *Time Schedule* |
|---|---|
| *a) Extension and improvement without transformers:* | *60 days* |
| *b) Extension and improvement with transformers.* | *90 days* |

*Note: This time schedule is also applicable for additional loads.*

*21. Compensation The Licensee is expected to achieve the performance prescribed. If a Licensee fails to meet the standards specified for various service areas, the affected consumer is entitled for compensation by the Licensees as stipulated in the Act. 1 [The compensation payable is set out in the table below, namely:-*

| *S.No.* | *Events* | *Compensation payable* |
|---|---|---|
| *1* | *Duty to give supply on request*<br>*a) New Service connection*<br>*b) Additional Load*<br>*c) Temporary Supply*<br>*d) Shifting of service connection*<br>*e) Transfer of service connection*<br>*f) Change of tariff* | *Rs.100/- per day of delay subject to maximum of Rs.1000/-* |
| *2* | *xxxx xxxxx* | *xxxx xxxxx* |
| *3* | *xxxx xxxxx* | *xxxx xxxxx* |
| *4* | *xxxx xxxxx* | *xxxx xxxxx* |
| *5* | *xxxx xxxxx* | *xxxx xxxxx* |
| *6* | *Responding to consumer's complaints* | *Rs.25/- for each day of delay subject to a maximum of Rs.250/-* |
| *7* | *xxxx xxxxx* | *xxxx xxxxx* |
| *8* | *xxxx xxxxx* | *xxxx xxxxx "* |

**11.5** ஒழுங்குமுறை விதி(4)–ன் படி மின்மாற்றி தேவைப்படாத நீட்டிப்பு மற்றும் மேம்பாடு உள்ள நிலையில் மின்இணைப்பை **60** நாட்களுக்குள் வழங்கவேண்டும் என்று தெரிகிறது.

11.6 ஒழுங்குமுறை விதி 21–ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது பல்வேறு சேவைப்பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள செந்தரங்களை சந்திக்க உரிமம்தாரர் தவறிவிட்டால் பாதிக்கப்பட்ட நுகர்வோர்கள் உரிமம்தாரரிடமிருந்து சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள ஈட்டுத்தொகையைப் பெற உரிமை உடையவர் ஆவார். மின்இணைப்பு கொடுப்பதை பொருத்தவரையில் ஒருநாள் தாமத்திற்கு ரூ.100/– வீதம் பெருமமாக ரூ.1000/– க்கு மிகாமல் ஈட்டுத்தொகையாக பெற நுகர்வோர் உரிமை உடையவர் என்று தெரிகிறது.

11.7 என் முன்னால் உள்ள வழக்கிலுள்ள நிகழ்வுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டது | – | 21.10.2014 |
| மின் இணைப்பு கட்டணம் செலுத்திய நாள் | – | 28.11.2014 |
| மின்இணைப்பு கொடுக்கப்பட்ட நாள் | – | 6.3.2015 |
| மின்இணைப்பு கொடுக்க எடுத்துக்கொண்ட காலம் | – | 135 நாட்கள் |

(இதில் மின்இணைப்பிற்கான கட்டணம் செலுத்துவதற்கு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து விண்ணப்பதாரர் செலுத்த எடுத்துக்கொண்ட காலம் மின்இணைப்பு வழங்க விதிக்கப்பட்டுள்ள கால அளவுகளில் உள்ளடங்காது ஆகும். ஆனால், இங்கு என்று அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்பதற்கான தகவல் இல்லை. எனவே, கட்டணங்கள் செலுத்த விண்ணப்பதாரர் கால அவகாசம் எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை என்று எடுத்துக் கொள்ளப்படுகிறது).

11.8 இந்த மின்இணைப்பு விண்ணப்பம் பெற்று 60 நாட்களுக்குள் வழங்கியிருக்கப்படவேண்டும். ஆனால், 135 நாட்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, தாமதம் 75 நாட்கள் ஆகும். காலதாமதம் 10 நாட்களுக்கு மேல் உள்ளதால் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதி 21–ன் படி இந்த மேல்முறையீட்டாளர் ரூ.1000/– ஈட்டுத்தொகை பெறுவதற்கு தகுதியானவர் என்று தீர்வு செய்யப்படுகிறது.

12. **<u>கோரிக்கை மூன்றிற்கான தீர்வு</u>**

12.1 மேல்முறையீட்டாளர் விதிகளுக்கு முரணாக வாரிய அலுவலர்கள் செயல்பட்டமையால் அது தொடர்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

12.2 23.2.2015—ல் தான் மின் கம்பம் நட்டு கம்பி இழுத்தல் போன்ற வேலைகள் நடந்தது. அந்த வேலைகள் முடிந்து மின்இணைப்பு வழங்கப்பட்ட நாள் 6.3.2015. ஆனால், மின்இணைப்பை 16.12.2014 அன்று கொடுக்கப்பட்டதாக குறித்து கொடுத்துவிட்டு மின்கட்டணங்கள் ரூ.78/— கட்டும்படி அறிவுறுத்தப்பட்டார் என்று தெரிவித்துள்ளார். எனவே, சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

12.3 எதிர்மனுதாரர் 16.12.2014—ல் மின்இணைப்பு வழங்கப்பட்டதாக வாரியத்தில் கணக்கு காட்டிவிட்டு 6.3.2015ல் தான் மின்இணைப்பு மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டது என்பதை சம்பந்தப்பட்ட இளநிலை பொறியாளர் ஒப்புக்கொள்கிறார் என்றும் மேற்படி விபரம் தெரிந்த உடன் அவர் மீது துறை வாரியான ஒழுங்குமுறை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருடாந்திர ஊதிய உயர்வு, ஒரு வருடத்திற்கு பின் விளைவுகள் தொடராவண்ணம் (one increment cut without cumulative effect) என்ற தண்டனை வழங்கப்பட்டுவிட்டது என்று தெரிவித்துள்ளார்.

12.4 மின்குறைதீர்ப்பாளரின் கடமை மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் ஆணை மீதான மேல்முறையீட்டு மனுவை பெற்று அதில் கூறப்பட்டள்ள புகாரை பரிசீலித்து அவற்றிற்கு திருப்திகரமான முடிவு ஏற்படுத்த வழிவகுத்தல் அல்லது உரிமம்தாரர் மற்றும் குறையுற்ற கட்சிகாரர்களிடையே பேச்சு வார்த்தை மூலம் இசைவிணக்கம் செய்வித்தல் அல்லது நடுவிலிருந்து இணக்குவித்தல் மூலமாய் உடன்பாடு ஏற்பட செய்தல் அல்லது சட்டம் மற்றும் விதிகள் அல்லது ஒழுங்குமுறைவிதிகளின்படி தீர்ப்பு வழங்குதல் ஆகும்.

12.5 எனவே, மின்குறைதீர்ப்பாளரின் தீர்வின்படி உரிமம்தாரரின் அலுவலர்கள் மீது நடவடிக்கை எதுவும் தேவையெனில் உரிமம்தாரர்தான் தன்னுடைய சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, இந்த கோரிக்கைக்கு நான் தீர்வு எதுவும் தெரிவிக்கவில்லை.

**13. <u>கோரிக்கை நான்கிற்கான தீர்வு</u>**

13.1 மேல்முறையீட்டாளர் **6.3.2015** அன்று மேற்பார்வை பொறியாளரிடம் தனக்கு விதிக்கப்பட்ட மின்கட்டணம் ரூ.78/– தவறு என்று புகார் சமர்ப்பித்தும் அந்த மனுவின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்து அவ்வாறு தன்னிடமிருந்து வசூலிக்கப்பட்ட கட்டணத்தை வட்டியுடன் திரும்ப தரவேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

13.2 மேலும், தன்னுடைய **6.3.2015** நாளிட்ட மனுவிற்கு எந்தவித பதிலும் தரவில்ல என்பதால் தனக்கு இழப்பீடு தொகையும் வழங்கப்படவேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

13.3 எதிர்மனுதாரர் **6.3.2015** அன்றுதான் மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால், மேல்முறையீட்டாளர் ரூ.78/–ஐ செலுத்தவில்லை என்றும் வற்புறுத்தி வசூல் செய்யப்பட்டது என்று பொய்யுரைத்துள்ளளார் என்று வாதிட்டுள்ளார். அவர் பணம் செலுத்தியமைக்கான ரசீது அவர் சமர்ப்பிக்கவில்லை. எனவே, அவர் செலுத்தவில்லை என்று வாதிட்டுள்ளார்.

13.4 இது சம்பந்தமாக நான் வாரியத்தின் கணினியிலுள்ள account summary–ஐ ஆராயவிரும்புகிறேன். அந்த account summary–ல் **4.2.2015** கணக்கீடு செய்யப்பட்டதாகவும் consumptionn nil என்றும் other charges ரூ.17/– என்று 2/2015 ஆன கணக்கீடு காலத்திற்கு மின்கட்டணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டணம் **7.3.2015** அன்று PGNT MB **1223538** என்று ரசீது படி செலுத்தப்பட்டுள்ளது என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், அந்த 'E' Receipt படி விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| Sl.No. | account code Description | amount |
|---|---|---|
| 1. | 23100 – CC charges | 17 |
| 2. | 61907 - RC Charges | 60 |
| 3. | 6250 - BPSC | 1 |
| | | 78 |

**13.5** மேற்கண்ட கணினியில் உள்ள தகவலின்படி ரூ.78/– வசூல் பண்ணப்பட்டுள்ளது என்று தெரிகிறது. மின்இணைப்பு கொடுக்கப்பட்டது **6.3.2015** என்று எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதால் மின்இணைப்பு வழங்குவதற்கு முன்பு உள்ள காலத்திற்கு மின்கட்டணம் மற்றும் RC Charges BPSC இவைகள் பெறப்பட்டது தவறு என்பதால் அவற்றை வட்டியுடன் மேல்முறையீட்டாளருக்கு திரும்ப அளிக்க வேண்டும் என்று தீர்வு செய்கிறேன்.

**13.6** மேலும், இந்த மேல்முறையீட்டாளர் இது சம்பந்தமாக **6.3.2015**ல் மேற்பார்வை பொறியாளர் தூத்துக்குடி மின்பகிர்மான வட்டத்திற்கு மனு கொடுத்தாக தெரிவித்தது அதன் நகலையும் சமர்ப்பித்துள்ளார். ஆனால், அதில் ஒப்புதல் எதுவும் இல்லை. அதில் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"நான் மின்இணைப்பு வேண்டி பல மாதங்களுக்கு முன்பு விண்ணப்பித்தும் எனக்கு மின்இணைப்பு வழங்காமல் மின்இணைப்பு வழங்க முதலில் ரூ.**6500/–** தரவேண்டும் என என்னிடம் கேட்டது தொடர்பாக நான் லஞ்ச ஒழிப்பு துறையினரிடம் புகார் கொடுத்தேன். அதன் அடிப்படையில் லஞ்ச ஒழிப்புத்துறையினரின் நடவடிக்கைக்கு பின் மின் கம்பங்கள் நட்டினர். பின்பு இன்று **(6.3.15)** மின்இணைப்பு வயர்மேனால் வழங்கப்பட்டது. மேலும், அவர் என்னிடம் பணம் கட்டாததால் **16.12.2014** அன்று கொடுக்கப்பட்ட மின்இணைப்பு துண்டிக்கப்பட்டதால் ரூ.78/– ஐ அலுவலகம் சென்று கட்டிவிடுமாறும் தெரிவித்தார்.*

*எனவே, இன்று **(6.3.15)** வழங்கிய மின்இணைப்பிற்கு ரூ.78/–யை செலுத்த சொல்லும் அலுவலர் மற்றும் உதவியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி அன்புடன் வேண்டுகிறேன். "*

**13.7** எதிர்மனுதாரர் சார்பில் கலந்து கொண்ட உதவி செயற்பொறியாளர் மேற்கண்ட மனு மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொண்டார். ஆனால், பதில் எதுவும் கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கவில்லை.

**13.8** மேல்முறையீட்டாளர் மேற்கண்ட மனுவின் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே, இழப்பீடு வேண்டும் என்று கோரியுள்ளதால் நான் தமிழ்நாடு மின்சார பகிர்மான

செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதிகளின்விதி 17–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"17. Responding to Consumer's Complaint*
*If any consumer makes a complaint in writing to the Territorial Engineer of the concerned licensee then, the Territorial Engineer concerned shall reply to the consumer within ten days after receipt of the letter. In case the Territorial Engineer requires to visit the site or consult any other officer to give a comprehensive reply, the Territorial Engineer shall explain to the consumer as to why a substantive response cannot be sent immediately and intimate the name address and telephone number of the Officer dealing with the complaint. The Territorial Engineer shall also ensure that a substantive response is sent to the consumer within twenty days of receiving the complaint letter."*

**13.9** மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான விதி 17–ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது நுகர்வோரின் மனுவிற்கு உரிமம்தாரரின் அந்த பகுதியின் பொறியாளர் 10 நாட்களுக்குள் பதில் அளிக்க வேண்டும் என்று தெரிகிறது. ஆனால், அந்த மனுவின் சம்பந்தமாக இடத்தை பார்வையிட வேண்டும் என்றாலோ அல்லது வேறு அலுவலரோடு கலந்து ஆலோசித்து பதிலை தரவேண்டியது இருந்தாலோ ஏன் பதில் உடனே தரமுடியவில்லை என்பதற்கான விளக்கத்தை நுகர்வோருக்கு தரவேண்டும். மேலும், முறையீட்டின்பேரில் நடவடிக்கை எடுக்கும் அலுவலரின் தொலை பேசி எண்.முகவரியை நுகர்வோருக்கு தெரிவிக்கவேண்டும். மேலும், மனு பெறப்பட்ட நாளிலிருந்து 20 நாட்களுக்குள் நுகர்வோருக்கு தக்க பதில் அனுப்பப்பட்டுவிட்டது என்பதை உறுதிபடுத்தி கொள்ளவேண்டும் என்று தெரிகிறது.

**13.10** என் முன்னால் உள்ள இந்த வழக்கில் **6.3.2015** அன்று மேற்பார்வை பொறியாளர் தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம் அவர்களிடம் மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு எண்.02–347–039–957, வழங்கப்பட்ட நாள் **6.3.2015** என்றும் ஆனால், **16.12.2014**ல் மின்இணைப்பு வழங்கப்பட்டதாக மின் அட்டையில் பதிவு செய்யப்பட்டு மின்இணைப்பு துண்டிப்பில் உள்ளதால் பணம் ரூ.78– செலுத்தவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது சம்பந்தமாக புகார் அளித்துள்ளார். மேற்கண்ட மனுவின் மீது மேற்பார்வை பொறியாளர்

அலுவலகத்தில் எடுத்த நடவடிக்கை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. கேட்புரையில் கலந்து கொண்ட உதவி செயற்பொறியாளர், மனு பெறப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொண்டார். ஆனால், மனு கிடைக்கப்பெற்ற நாள் மற்றும் எடுத்த நடவடிக்கை பற்றிய தகவல்கள் எதுவும் தெரிவிக்கவில்லை.

13.11 எனவே, எதிர்மனுதாரர் ஆகிய மேற்பார்வை பொறியாளர், தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம் அவர்களிடம் மேல்முறையீட்டாளரின் 6.3.2015 நாளிட்ட மனு அலுவலகத்தில் பெறப்பட்ட நாள் அதன் மீது எடுத்த நடவடிக்கை ஆகியவற்றை தெரிவிக்கும்படியும் கொடுக்கப்பட்ட பதிலின் நகலையும் அனுப்பும்படி மின் குறைதீர்ப்பாளரின் 6.1.2016 நாளிட்ட கடிதத்தின்படி கோரப்பட்டது.

13.12 மேற்பார்வை பொறியாளர், தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம் அவர்கள் தன்னுடைய 21.1.2016 நாளிட்ட பதில் கடிதத்தில் துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை மனுதாரருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்து மனுதாரருக்கு அனுப்பியுள்ள 14.1.2016 நாளிட்ட கடிதத்தின் நகலையும் இணைத்து அனுப்பியுள்ளார்.

13.13 மேற்கண்ட தகவல்களின்படி மேற்பார்வை பொறியாளரால் மேற்கண்ட மேல்முறையீட்டாளரின் மனுவில் சம்பந்தப்பட்டுள்ள மின்இணைப்பு எண். சம்பந்தமான முறையீடு பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட உதவி பொறியாளர், திரு.பி.உமையொருபாகம் அவர்கள் மீது தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது என்று அறியமுடிகிறது. ஆனால், நடவடிக்கை பற்றிய தகவல்களை மனுதாரருக்கு தெரிவித்தது மனு பெற்று சுமார் 10 மாதங்கள் கடந்த பின்புதான், அதுவும் மின்குறைதீர்ப்பாளரின் 6.1.2016 நாளிட்ட கடிதம் கிடைத்த பின்புதான் என்றும் தெரிகிறது.

13.14 மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான விதி 17–ன் படி 10 நாட்கள்/20 நாட்களுக்குள் மனுதாரருக்கு உரிமம்தாரர் பதில் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால், மேற்கண்ட காலக்கெடுவுக்குள் பதில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. தற்பொழுது 14.1.2016ல் அவருக்கு பதில் கொடுக்கப்பட்டுள்ளது.

13.15 பத்தி 11.4ல் கொடுக்கப்பட்டுள்ள மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதிகளின் விதி21–ன் பட்டியல் வரிசை எண். 6ன் படி நுகர்வோரின் மனுக்களுக்கு பதில் வழங்க தாமதமாகும் ஒவ்வொரு நாளுக்கும் ரூ.25/– வீதம் பெருமமாக ரூ.250/–க்கு மிகாமல் ஈட்டுத்தொகை செலுத்தவேண்டும். இங்கு மேல்முறையீட்டாளரின் மனுவிற்கு உரிமம்தாரரின் பதில் அளிப்பதற்கு ஆன காலதாமதம் 10 நாட்களுக்கும் அதிகமாக உள்ளதால் உரிமம்தாரர் மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களின் விதி 17–ன் படி விதிக்கப்பட்ட செயல்திறனை நிறைவேற்றவில்லை என்பதால் ஈட்டுத்தொகையாக ரூ.250/– பெறுவதற்கு மேல்முறையீட்டாளர் தகுதியானவர் என்று தீர்வு செய்யப்படுகிறது.

14. <u>கோரிக்கை ஐந்திற்கான தீர்வு</u>

14.1 மேல்முறையீட்டாளர் ஏப்ரல் 2015 மற்றும் ஜுன் 2015 ஆகிய இரண்டு கணக்கீடு காலத்திற்கும் கணினியில் பயன்பாடு இல்லை (not in use) என்று பதிவு செய்யப்பட்டுள்ளதால் அந்த கணக்கீடு காலத்திற்கான மின்கட்டணங்களான ரூ.29/–, ரூ.90/– ஆகியவற்றை திரும்ப தரவேண்டும் என்றும் அது சம்பந்தமாக சேவை குறைவு ஏற்படுத்திய ஊழியர்கள் மீது நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

14.2 எதிர்மனுதாரர் மின்இணைப்பு 6.3.15 வழங்கப்பட்டுள்ளது. மின்பயன்பாடு 9 யூனிட் மற்றும் 70 யூனிட் என்று 4/2015 மற்றும் 6/2015 ஆகிய காலங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டி மின் பயன்பாட்டிற்குதான் மின்கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது எனவே, கணினியில் பயன்பாடு இல்லை (not in use) என்று தவறாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்று வாதிட்டார்.

14.3 இந்த கோரிக்கை பொறுத்தவரையில் மின்இணைப்பு 6.3.15 அன்று வழங்கப்பட்டுள்ளது என்பதை இருதரப்பினராலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 8/2015, 10/2015, 12/2015 மாதங்களிலும் மேற்கண்ட மின்இணைப்பின் பயன்பாடு 60 யூனிட், 50 யூனிட், 70 யூனிட் என்று பதிவு ஆகியுள்ளது. எனவே, 6/2015 கணக்கீடு காலத்தில் 60 யூனிட் பயன்பாடு என்பது ஏற்புடையதுதான் என்று நான் கருதுகிறேன். மேலும், 4/2015 கணக்கீடு காலங்களில் மின்பயன்பாடு உள்ள காலம் 6.3.2015 முதல் 2.4.2015 வரைதான் எனவே, அந்த காலத்தில் உள்ள பயன்பாடு 9 யூனிட் என்பதும் ஏற்புடையதுதான். ஆனால், 4/2015 காலத்திற்கு நிலையான கட்டணங்கள் (fixed charges) 6.3.15 முதல் 2.4.2015 காலங்கள் வரையிலும் உள்ள நாட்களுக்கு தகுந்தாற்போல்தான் (Proportionate) கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவேண்டும். ஆனால், ஒரு முழு கணக்கீடு காலத்திற்கான நிலையான கட்டணங்கள் (fixed charges) வசூலிக்கப்பட்டுள்ளது. எனவே, நிலையான கட்டணங்கள் (fixed charges) 6.3.2015 முதல் 2.4.2015 காலங்களுக்கான Proportionate கட்டணத்தை தான் வசூலிக்கவேண்டும் என்றும் அதிகப்படியாக வசூலிக்கப்பட்ட கட்டணத்தை வட்டியுடன் திரும்ப வழங்க வேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

15. **<u>கோரிக்கை ஆறிற்கான தீர்வு</u>**

15.1 மேல்முறையீட்டாளர் ரூ.6500/– 18.2.2015 அன்று தன்னால் மின்இணைப்பு பெறுவதற்காக கொடுக்கப்பட்டுள்ளது என்றும் புதிய மின்இணைப்பு பெறுவதற்கான கட்டணமாகிய ரூ.1550/– போக மீதியை தன்னிடம் வட்டியுடன் திரும்ப தரவேண்டும் என்று கோரியுள்ளார்.

15.2 எதிர்மனுதாரர் ரூ.6500/– ஐ மேல்முறையீட்டாளர் வாரியத்திடம் செலுத்தவில்லை. அப்பணம் DV&AC காவல்துறையிடம் அவரால் ஒப்படைக்கப்பட்ட பணம் அந்த பணத்தில் DV&AC யால் ரசாயனம் தடவப்பட்டு மேல்முறையீட்டாளரால் AVM ராஜன் trap செய்யப்பட்டு மேற்படி பணத்தை மீண்டும் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது

எனவே, மின்வாரியத்திடம் அந்த பணம் இல்லை என்பதால் அந்த பணத்தை திரும்ப தரமுடியாது என்று வாதிட்டுள்ளார்.

15.3 மேலும், மின்இணைப்பு பெறுவதற்கு உரிய கட்டணமான ரூ.1550/—ஐ 28.11.2014 அன்று செலுத்தி ரசீதும் பெற்றுள்ளார். எனவே, இரண்டாவது முறையாக மேல்முறையீட்டாளர் ரூ.6500/—ஐ கட்டணம் என்ற முறையில் படித்த நபரான மேல்முறையீட்டாளர் செலுத்தியிருக்க முடியாது என்று வாதிட்டுள்ளார். மேலும், மேல்முறையீட்டாளர் ரூ.6500/—ஐ ஊழியர் திரு. AVM ராஜன் அவர்களிடம் கொடுப்பது சம்பந்தமாக பேசியுள்ளார். மேற்படி திரு. AVM ராஜன் அவர்கள் DV&AC காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்றும் வாதிட்டுள்ளார்.

15.4 இந்த கோரிக்கையை பொறுத்தவரையில் புதிய மின்இணைப்பு பெறுவதற்கான கட்டணமாக ரூ.1550/— 28.11.2014 அன்று TIV347IA2S164 dt.28.11.2014 என்ற ரசீதும் செலுத்தப்பட்டுள்ளது என்று கணினியிலுள்ள account summaryன் படி தெரிகிறது. மேலும், ரூ.6500/— என்பது AVM ராஜன் அவர்களிடம் கொடுக்கும்பொழுது DV&AC மூலம் அவர் கைது செய்யப்பட்டு சிறையிலுள்ளார் என்றும் அந்த ரூ.6500/— நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டுள்ளது என்பதும் தெரியவந்துள்ளது. எனவே, மேற்கண்ட ரூ.6500/— வாரியத்தின் கணக்கில் சேர்க்கப்படவில்லை என்பதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான ரூ.6500/—ல் அவருடைய மின்இணைப்புக்கான ரூ.1550/— போக மீதமுள்ள தொகையை திரும்ப வழங்க வேண்டும் என்பது ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

**16. <u>முடிவுரை</u>**

16.1 பத்தி 10—ல் தெரிவிக்கப்பட்டுள்ள தீர்வின்படி கோரிக்கை ஒன்றில் கோரியுள்ளபடி புதிய மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தை பெற்றமைக்கான ஒப்புதல் கடிதம் வழங்காமைக்கு ஈட்டுத்தொகை ஒழுங்குமுறை ஆணைய மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான விதிகளின்படி முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**16.2** பத்தி **–11ல்** தெரிவிக்கப்பட்டுள்ள கோரிக்கை இரண்டிற்கான தீர்வின்படி இந்த மேல்முறையீட்டாளர் அவரின் புதிய மின்இணைப்பை பெறுவதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களின்படி ரூ.**1000/–** ஈட்டுத்தொகையாக பெறுவதற்கு தகுதியானவர் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**16.3** பத்தி **13–ல்** தெரிவிக்கப்பட்டுள்ள கோரிக்கை நான்கிற்கான தீர்வின்படி மின்இணைப்பு வழங்கப்படாத காலங்களுக்கு மேல்முறையீட்டாளரிடம் மின்கட்டணம் BPSC, மற்றும் RC charges என்று வசூலிக்கப்பட்ட ரூ.**78/–**ஐ வட்டியுடன் திரும்ப வழங்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**16.4** மேலும், **6.3.2015ல்** மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்த மனுவிற்கு மேற்பார்வை பொறியாளர், தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம் அவர்கள் தற்பொழுது **14.1.2016–ல்** தான் பதில் அனுப்பியுள்ளார் என்பதால் பதில் வழங்குவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் **10** நாட்களுக்கும் அதிகமாக உள்ளதால் ஈட்டுத்தொகையாக ரூ.**250/–**ஐ பெறுவதற்கு மேல்முறையீட்டாளர் தகுதியானவர் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**16.5** பத்தி **14–ல்** தெரிவிக்கப்பட்டுள்ள தீர்வின்படி **4/2015** கணக்கீடு காலத்திற்காக வசூலிக்கப்பட்டுள்ள நிலையான கட்டணத்தை (fixed charges) மின் இணைப்பு கொடுக்கப்பட்ட **6.3.15**லிருந்து மின் பயனீட்டளவு எடுத்த நாளான **2.4.2015** வரையிலான காலங்களுக்கு PROPORTIONATE ஆக கணக்கீடு செய்யப்பட்டு அதிகமாக வசூலிக்கப்பட்டுள்ள நிலையான கட்டணத்தை (fixed charges) வட்டியுடன் மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வழங்கப்பட வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**16.6** பத்தி **15–ல்** தெரிவிக்கப்பட்டுள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான ரூ.**6500/–ல்** மின்இணைப்பு பெறுவதற்கான கட்டணமாகிய ரூ.**1550/–** கழித்து கொண்டு மீதமுள்ள தொகையை அவருக்கு திரும்ப தரவேண்டும் என்று கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

16.7 காப்பீட்டுத்தொகைக்கு ஒழுங்குமுறை ஆணையம் அனுமதித்துள்ள வட்டி விகிதத்தின்படி பத்தி 16.3 மற்றும் 16.5ல் தெரிவித்துள்ள திரும்ப வழங்கப்படவேண்டிய தொகைகளுக்கு வட்டி கணக்கீடு செய்யப்படவேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

16.8 மேற்கண்ட பத்தி 16.2 மற்றும் 16.4–லுள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளருக்கு வழங்க வேண்டிய ஈட்டுத் தொகையான ரூ.1250/–(ரூ.1000/– + 250/–)ஐ அவருடைய அடுத்த மின்கட்டண காலத்திற்கு முன்பாக அவருடைய மின்இணைப்பின் கணக்கில் வரவு வைக்கப்படவேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

16.9 பத்தி 16.3–ல் தெரிவித்துள்ளபடி மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வட்டியுடன் வழங்க வேண்டிய தொகையான ரூ.78/– மற்றும் பத்தி 16.4ன் படி திரும்ப வழங்க வேண்டிய நிலையான கட்டணம் (fixed charges) ஆகியவற்றையும் மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பின் கணக்கில் அடுத்த மின்கட்டண காலத்திற்குள் வரவு வைக்கப்படவேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

16.10 இந்த வழக்கில் 6.3.2015–ல் வழங்கப்பட்ட மின்இணைப்பை 16.12.2014–ல் வழங்கப்பட்டுள்ளதாக பதிவு செய்து 16.12.2014 முதல் மின்கட்டணம் தாமதக்கட்டணம் (BPSC) மற்றும் மறுமின்இணைப்புக் கட்டணம் (RC) ஆகியவைகள் வசூல் செய்யப்பட்டுள்ளது என்பது தவிர்க்கப்படவேண்டிய தவறு ஆகும். எனவே, மேற்பார்வை பொறியாளர்/தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம் அவர்கள், இதுபோன்ற தவறுகள் மீண்டும் மேற்கண்ட மின்பகிர்மான வட்டத்தில் நடைபெறாமலிருக்க தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்.

16.11 மேற்கண்ட தீர்வுகளை நிறைவேற்றியது தொடர்பான அறிக்கையை எதிர்மனுதாரர் இந்த தீர்வு கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

16.12 மேற்கண்ட தீர்வுகளுடன் மேல்முறையீட்டு மனு எண்.78/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
1) திரு. எஸ். அந்தோணி ஜெயபால்,
13/1, கிருஷ்ண ராஜபுரம்,
4வது தெரு,
தூத்துக்குடி – 628 002.

2) மேற்பார்வை பொறியாளர்,
தூத்துக்குடி மின் பகிர்மானவட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
131 & 132 எட்டயபுரம் ரோடு,
தூத்துக்குடி – 628 001.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
தூத்துக்குடி மின் பகிர்மானவட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
131 & 132 எட்டயபுரம் ரோடு,
தூத்துக்குடி – 628 001.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19–A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – <u>மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.